REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: புரட்டாசி 28உ வியாழன் (14—10—54) ★ ★ வெளியூர்: புரட்டாசி 27உ வெள்ளி (15—10—54) [இதழ் 105

## ஆஸ்திரியாவில் அகதிகள்!

ஜெனீவா, அக். 13—

ஜெர்மானிய மொழியினரல்லாத சுமார் 35,000 அகதிகள் கடந்த 1952 ஜனவரி 1-ந் தேதியன்று ஆஸ்திரியாவில் புகுந்தனர். அவர்கள் அத்தனை பேரும் ஆஸ்திரியக் குடிமக்களைப் போலவே சகல உரிமைகளும் அளிக்கப்படுவர் என அறிவிக்கப்படுகிறது.

ஜெனீவாவிலிருக்கும் அகதிகளுக்கான ஐ. நா. சபைக் கமிஷன் காரியாலயத்தில் ஆஸ்திரிய உள்நாட்டு அமைச்சரவை, அந்த அகதிகளுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள உரிமைகள் வெகு அண்மையில் நடைமுறைக்கு வரும் என அறிவித்துள்ளதாம்.

# "சங்ககால மக்கள் ஆரியருக்கு அடிமையாக இருக்கவில்லை"

## "படையெடுத்து ஆரியர் தலைமை பெறவில்லை"

## "அவர்களை உயர்த்தித் தலைமைப் பதவி கொடுத்தது நாம்தான்"

### நாவலர் பாரதியார் தரும் விளக்கம்

"சங்ககால மக்கள் ஆரியருக்கு அடிமைப்படாது இருந்தனர்; ஆரியர்கள் தங்கள் படையெடுப்பினலோ, அல்லது அரசியலாலோ அவர்கள் தமிழர்களுக்குத் தலைமை தாங்கவில்லை; ஆனல், நாம்தான், எதற்கெடுத்தாலும் அவர்களை உயர்த்தித் தலைமைப் பதவி கொடுத்துவிட்டோம்; 'சங்கம்' என்ற சொல் தமிழ்ச் சொல்லே அல்ல; இன்று, இளைஞர்களுக்குத் தமிழ் ஆர்வம்தான் உண்டே ஒழிய, ஆக்க வேலைகளில் அவர்கள் ஈடுபடவில்லை,"

என்று, மதுரை திருவள்ளுவர் கழகச் சார்பில் நடைபெற்றதோர் விழாவில் கலந்துகொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:—

"உறங்கிய தமிழ்த் தலைவர்களுக்கு இன்ருவது தமிழ் உணர்ச்சி வந்ததே என்பதை அறிந்து மகிழ்கிறேன். ஆரிய இலக்கியங்களிலிருந்து தமிழ் வந்தது என்று இன்று சிலர் கூறுவது, அவர்கள் பழமையை அறியாததுதான் காரணம். தமிழை உருவாக்கியவன் அகத்தியன் என்பது வெறும் பொய் மொழியே!

"தமிழர் தம் அடிமை மோகத்தால், தங்கள் பண்டைக்காலப் பெருமைகளையும், சிறப்புக்களையும் மறந்துவிட்டனர்; ஆகவே, ஆரியர்களை வைது பயனில்லை; அவர்கள் வாழ வந்த இடத்திலே, தங்கள் மொழியையும், கலாச்சாரத்தையும் பரப்பினர்களே! இன்று வாழும் தமிழர் என்ன செய்தனர் தங்களின் மொழி முன்னேற்றத்திற்கு? எனவே, 'யாரையும் பழிக்காது, தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு ஆக்க வேலை செய்ய வேண்டும்," என்பதே இனி நம் இளைஞர்கள் செய்ய வேண்டிய பணியாகும். நமது வாழ்விலே முன்னேற்றங்காண, இன்றைய இளைஞர்கள் திட்டங்கள் பலதீட்டி, ஆக்க வேலைகளிலீடுபடவேண்டும்."

## 'பிள்ளையார் பொம்மைகளை உடைப்பது ஒரு குற்றமல்ல'

### 'இத்தகைய செயல் அறிவுடைமையாகாது'

பிள்ளையார் உடைப்பு வழக்கில் தீர்ப்பு

"பிள்ளையார் பொம்மைகளை உடைப்பது ஒரு குற்றம் இல்லாவிடினும், பொது மக்கள் முன்னிலையில் இத்தகைய ஒரு செயலைச் செய்வது முன்யோசனையில்லாத, விவேகமற்ற ஒரு காரியமாகும்."

"இம்மாதிரி பொம்மைகளை உடைப்பதினல் உடைப்பவர் மீது மக்களுக்கு ஒரு வகை வெறுப்புணர்வு வளர்வதைத் தவிர, வேறு எந்த உபயோககரமான பலனையும் பெறமுடியாது."

"கோவிலில் உள்ள கடவுள் விக்கிரகங்களைப் போன்றே கடைகளில் கிடைக்கும் பொம்மைகளிருந்தாலும், அவையெல்லாம், எந்த ஒரு வகுப்பு மக்களுடையவும் புனிதமான வழிபாட்டிற்குரியவை எனக் கோள்ள முடியாது."

—இவ்வாறு, பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மீதும், மற்றும் தோழர்கள் டி. பி. வேதாசலம், எம். ஆர். இராதா ஆகியவர்கள் மீதும் கடந்த 1953 மே 27-ல் பிள்ளையார் உருவப் பொம்மையை திருச்சி டவுன்ஹால் முன்பு உடைத்ததாகக் குற்றம் சாட்டி, திருச்சி நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து, வீரபத்திரன் செட்டியார் என்பவர் உயர்நீதி மன்றத்தில் கொடுத்த மனுவின் மீது தீர்ப்பளிக்கையில், நீதிபதி என். சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

மனுவைத் தள்ளுபடி செய்து, 'பிள்ளையார் உருவங்களை உடைப்பது தவறல்ல,' என்று தீர்ப்பளித்த அவர் மேலும் தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது:—

"'பிள்ளையார்' உருவங் கொண்ட எல்லா பொம்மைகளும் வழிபாட்டிற்குரிய கடவுட் சிலைகளாகிவிட முடியாது; ஒரு கோவிலினுள் 'பிரதிஷ்டை' செய்யப்பட்டுள்ளதும், திருவிழாக் காலங்களில் ஊர்வலம் எடுத்து வரப்படுவதுமான பொம்மைகள்தான் பக்தர்கள் வழிபாட்டிற்குரிய புனிதத் தன்மை பெற்றவை என்று கருதப்படும். எனவே, நிகழ்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு பொம்மையை உடைப்பது, இ. பி. கோ. 295-ம் பிரிவுக்குள் அடங்காது.

தெருவீதிகளில், மக்களின் வழிபாட்டிற்குரியதா யிருந்து, பின்னர், புறக்கணிக்கப்பட்டவையாகக் கிடைக்கும்

(5-ம் கலம் பார்க்க)

## 20,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

வட ரொடீஷியாவில் முதன் முதலாகக் கட்டிடத் தொழிலாளர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தம் மற்ற தொழிலாளரிடையேயும் ஆரம்பித்து விட்டிருக்கிறது. இதன் விளைவாக, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் 20,000 பேருக்கும் அதிகமானவர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## கடன் ஒத்திவைப்புச் சட்டம் நீடிக்குமா?

சென்னை, அக். 12—

விவசாயிகளுக்குக் கஷ்ட நிவாரணம் அளிக்க இயற்றப்பட்டு, வருகிற பிப்ரவரி மாதத்தோடு காலாவதியாகவிருக்கிற கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை நீடித்துவைப்பதா வேண்டாமா என்பது பற்றி இன்னும் அரசாங்கம் எந்தவிதமான முடிவுக்கும் வரவில்லையென்று சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் தெரிவித்திருக்கிருர்.

## 8 பெண்கள் உள்பட 125 பேர் கைது

### பசு வதை எதிர்ப்பு இயக்கம் வலுக்கிறது!

லக்னோ, அக். 12—

உத்திரப் பிரதேச சட்டசபை கட்டிடத்தின் முன்பாக நடைபெறும் பசுவதை எதிர்ப்பு சத்தியாக்கிரகிகளைப் போலீசார் கைது செய்யத் துவங்கினர். இன்று 125 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அனைவரும் சட்டசபைக் கட்டிடத்தின் முன்பு வரிசையாக நிற்க முயற்சித்தனர்; அவர்களைப் போலீசார் கைது செய்தனர். பகல் 12 மணிக்குள் சத்தியாக்கிரகிகளை ஏற்றிக்கொண்டு ஏழு போலீஸ் லாரிகள் புறப்பட்டனர்.

லக்னோவில், செப்டம்பர் 23-ந் தேதி முதல் துவங்கி நடைபெறும் பசுவதை எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தில், போலீசார், இதுவரை யாரையும் கைது செய்யவில்லை. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்று நகருக்கு வெளியே விட்டு வந்த

(4-ம் பக்கம் பார்க்க.)

## திரு-கொச்சி மக்கள் பெருக்கத்தைக் குறைக்க!

### "5000 குடும்பங்களை வடநாட்டில் குடியேற்ற வேண்டும்"

### சர்தார் கே. எம். பணிக்கர் காட்டும் பரிகாரம்

"மலையாளிகள் பிழைப்பை மட்டுமே முக்கியமாகக் கொண்டு, தாங்கள் பிறந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்து, பிற மாநிலங்களுக்குச் செல்லுகின்றனர். கொஞ்சம் பணம் சேர்ந்ததும், மக்கள் தொகை கூடுதலாக உள்ள சொந்த மாநிலத்துக்கு அவர்கள் திரும்பி விடுகின்றனர்."

"உலகிலேயே திரு-கொச்சிதான் அளவிற்கு அதிகமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறது; எனவே, பிற மாநிலங்களுக்குக் குடியேறி, அப்பகுதிகளில் நிரந்தரக் குடிகளாகி வருவது என மலையாளிகள் முடிவுக்கு வரவேண்டிய நேரம் வந்துவிட்டது,"

இவ்வாறு சர்தார் பணிக்கர் கூறியதோடு, திரு-கொச்சி மக்கள் பெருக்கத்தைக் குறைக்க மத்திய சர்க்கார் போட்டுள்ள திட்டத்தையும் அறிவித்து, அத்திட்டம் விரிவாக வேண்டுமெனவும் கூறினர்.

போபால் பகுதியில் 500 மலையாளிகள் குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை அவர் பார்வையிட்டார்.

மேற்படி ஐந்நூறு குடும்பங்களில், இம்மாத முடிவிற்குள் 100 குடும்பங்களைக் குடியேற்றும் வேலை முடிந்துவிடும் என்றும், இந்த ஆண்டு முடிவிற்குள் மீதமுள்ள குடும்பங்களைக் குடியேற்றுவதும் முடிவு பெறும் எனவும் அவர் அறிவித்தார்.

500 குடும்பங்களைக் குடியேற்றுவதற்குப் பதிலாக, வருகின்ற ஐந்தாண்டுக்குள் 5,000 குடும்பங்களை திரு-கொச்சியிலிருந்து நாட்டின் அப்பகுதிக்குக் குடியேற்ற வேண்டும்,"

என பணிக்கர் வலியுறுத்திக் கூறினர்.

திரு—கொச்சியின் மொத்த நிலப்பரப்பு 9,100 சதுர மைல் ஆகும்; அதில் 4,000 சதுர மைலுக்கு மலைப் பிரதேசமாகும். 1 சதுர மைலுக்கு 1,000 பேர்கள் வீதம் சில பகுதிகளிலும், 5,000 பேர்கள் வீதம் கடலை ஒட்டிய பகுதிகளிலும் மக்கள் தொகை உள்ளது.

## மறியலில் ஈடுபட்டு சிறையிலுள்ள நாஞ்சில் தி. மு. கழகத் தோழர்கள்

### தண்டனை காலம் முடிந்து நவ. 5-ல் விடுதலை பெறுகின்றனர்?

திரு—தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாவின் அறிக்கையின்படி கடந்த ஆக. 6-ந் தேதியன்று நடைபெற்ற அடையாள மறியலில் பங்கு கொண்டு, மூன்று மாத சிறைத் தண்டனை ஏற்ற எல்லா தி. மு. கழகத் தோழர்களையும் திருவனந்தபுரம் மத்திய சிறையில் சந்திக்க பல தடவை சென்றும் அதிகாரிகள் மறுத்துவிட்டனர். 12—10—54-ல் மிக்கமுயற்சிகளின்மீது, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத் தோழர் பி. ராமச்சந்திரன் அவர்களை சிறையில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நவம்பர் 5-ந் தேதியன்று, தோழர்கள் விடுதலை அடைவதாக அவர் குறிப்பிட்டார். (ந. நி.)

## பிள்ளையார் பொம்மைகளை....

(1-ம் கலத்தின் தொடர்ச்சி)

கடவுள் உருவங்கள் எத்தனையோ? அத்தனையையும் வழிபாட்டிற்குரியன எனக் கொள்ள முடியுமா? அத்தகைய புறக்கணிக்கப்பட்ட பொம்மைகள் வழிபாட்டிற்குரிய தன்மையை இழந்துவிடுகின்றன.

எனவே, கோவில் ஒன்றின் உள்ளிருக்கும் பொம்மையை உடைத்தாலோ அல்லது பங்கப்படுத்தினலோதான் இ. பி. கோ. 295 பிரிவு பயன்படும்; அது குற்றமாகும்," என்று குறிப்பிட்டுவிட்டு, தனது தீர்ப்புக்கு ஆதாரமாக, பிரிட்டிஷ் ராணியாருக்கும் இமாம் அலி என்பவருக்குமிடையே நடந்த வழக்கொன்றில் தீர்ப்பளித்த நீதிபதி முகம்மது அவர்களின் குறிப்புகளையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14—10—1954 வியாழன்

# கைமேல் பலன்?

இலங்கையில் வாழும் இந்திய மரபினரின் எதிர்காலத்தைக் குறித்து இலங்கை சர்க்காருக்கும்—இந்திய சர்க்காருக்கும் இடையில், இரண்டாம் முறையாக உடன்பாடு ஏற்பட்டு இருக்கிறது.

இந்த உடன்பாட்டை, இலங்கை அரசு, எந்த அளவு மதித்து நடந்து கொள்ளப் போகிறது என்பதை உணர்ந்து கொள்ள நாம் அதிக நாள் காத்திருக்கத் தேவை இல்லை.

அவ்வுடன்படிக்கையில் எழுதப்பட்ட மையின் ஈரம் உலருவதற்கு முன்பாகவே, தன்னுடைய உள்ளக்கிடக்கையை நிறைவேற்றிக்கொள்ள, ஒப்பந்தத்தின் விதிகளை உதறித்தள்ளி நடக்க இலங்கை அரசு முனையும் என்பது உறுதி.

அதாவது, தனக்கு இனித் தேவைப்படாத இலங்கைவாழ் இந்திய மரபினரில் பெரும்பான்மையோரை, இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்து கொள்ள மறுத்து, இந்தியத் தாயகத்துக்குத் துரத்திவிட வேண்டுமென்பதுதான் இலங்கை அரசின் அந்தரங்க நோக்கம்.

அது, ஏற்கனவே இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதும், அந்த நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும்.

முன்னால் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஒரு புகலாகக் கொண்டு, தனது உள்ளத்தில் மறைந்து கிடந்த இந்திய மரபினரை விரட்டியடிக்கும் திருப்பணியை, மிக மிகத் தீவிரமாக செயலாற்றத் துவங்கியது. அதன் பலனாக இந்திய சர்க்காருக்கும் இலங்கைசர்க்காருக்குமிடையில் மீண்டும் மனக்கசப்பு தலையெடுத்தது. இதைக் கண்டதும் மறுபடியும் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு புது மெருகிட்டு, புதியதொரு ஒப்பந்தம் என பெயரிட்டுக்கொள்ள வேண்டுமென இலங்கை அரசு முடிவு கட்டிக்கொண்டது. அதன்படியே டெல்லிக்கு வந்து, மூன்று நாள் தூங்காது கண் விழித்து, தனது நோக்கத்தை நிறைவேற்றியும் கொண்டது!

இலங்கையில் வாழும் இந்திய மரபினர், நம்மரபைச் சார்ந்தவர்களென்ற நினைப்பு இல்லாதிருந்தால், இலங்கை இந்தியர் பிரச்சினையில் அக்கரை காட்ட வேண்டிய கட்டாயம் இந்திய சர்க்காருக்கு ஏற்படுவதற்கு இடமே இல்லை. உலக நிந்தனைக்கும், இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதி மக்களின் கடும் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் அஞ்சியாவது, இலங்கைவாழ் இந்திய மரபினர்பால் அக்கரை காட்ட வேண்டிய நெருக்கடி, இந்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்டது என்பதை, அரசியல் நடைமுறை தெரிந்தவர்கள் தெரிந்தே இருக்கிறார்கள். எனவே, இலங்கை இந்தியர் சிக்கலைக் குறித்து கண்டிப்பாக இருக்க வேண்டிய அளவிற்கு, கவலையும் பொறுப்பும் இந்திய அரசாங்கத்துக்கு இல்லாமல் இருப்பதிலும் ஆச்சரியமில்லை! ஏதோ உலகுக்கஞ்சி, உள்நாட்டு மக்களுள் ஒருசாராரின் கொதிப்புக்கஞ்சி, இலங்கை வாழ் இந்தியர் எதிர்காலம் குறித்து, இலங்கை அரசாங்கத்துடன், சாரமற்ற ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள இந்திய சர்க்கார் முனைந்ததிலும் ஆச்சரியமில்லை!

ஏறத்தாழ பத்து லட்சம் மக்கள்—இந்திய மரபினர் என்று சொல்லப்படுபவர்கள் இலங்கையில் இருப்பதாக 1953-ம் ஆண்டில் எடுத்த மக்கள் எண்ணிக்கைக் கணக்கு அறிவிக்கிறது. அவைகளில் 8 லட்சம்பேர் இலங்கைக் குடிஉரிமைக்கு மனுச் செய்து கொண்டனர். அவர்களில் 1½ லட்சம் மக்களாவது இலங்கைக் குடிமக்கள் எனப் பதிவு செய்யப்படுவார்களா என்பது ஐயத்திற்கிடமாகும். மீதியுள்ள 6½ லட்சம் பேரில் இந்தியக் குடிஉரிமை பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆயிரக் கணக்கிலேயேதான் இருக்க முடியும். மீதமுள்ள லட்சக் கணக்கான மக்கள் நாடற்ற 'நாடோடி'களாகக் கருதப்படுவர்—அப்படியே கருதப்பட்டு, இலங்கை வாழ் இந்திய மரபினர் அவமானப்படுத்தப் படுகின்றனர். இந்திய அரசாங்கத்துக்கு இதில் வெட்கமும் இல்லை-வேதனையும்இல்லை! நிற்க,

தற்போது இலங்கையில் வேலை செய்துவரும் ஒரு இந்தியர், இனி இந்தியக் குடிஉரிமை பெற்றால், அதே வேலையில், அவருடைய 55-வயது வரையில் வேலை பார்க்க வசதி செய்து தரப்படும் என்று இலங்கை அரசின் சார்பில் உறுதி கூறப்பட்டதாம்!

இந்த உறுதிப்பாட்டை இலங்கை சர்க்கார் நிறைறேற்வறக் கிளம்பி இருக்கிற இலட்சணமே இலட்சணம்!

இப்பொழுது குறைந்த வயதினராக வேலை பார்த்துவரும் இந்தியரை, அவருடைய 55-வது வயதுவரை அதே வேலையில் நீடிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறிய இலங்கை அரசாங்கம், உடன்பாடு ஏற்படும் காலத்தில், அதாவது இரண்டு நாளைக்குமுன், 55 வயது நிரம்பி, வேலை பார்த்து வருபவர்களை எல்லாம் இந்தியாவிற்கு அனுப்பிவிடப் போவதாக எச்சரிக்கிறது. இவ்வகையில் 30,000 'இந்தியர்', தாயகம் வர இருக்கின்றனர்!

அவர்கள், இன்னமும் இலங்கைக் குடிகளாகவோ, இந்தியக் குடிகளாகவோ பதிவு செய்துகொள்ளப்படாதவர்கள். அவர்கள் எந்த நாட்டுக் குடிகள் என்பது நிர்ணயமாவதற்குள்ளாகவே, அவர்கள் அனைவரையும் தமிழ் நாட்டுக்குக் கப்பலேற்ற, கங்கணம் கட்டிவிட்டார் இலங்கை பிரதமர் கொத்தலாவலை! டெல்லியில் உருவான இரண்டாவது உடன்படிக்கையின் கைமேல் பலனாக, இதைக் கொள்ளாமல் வேறு எப்படி கொள்ளுவது?

# கம்யூனிஸ்டுகள் கண்ணோட்டத்தில் காந்தியார்!

## "வெள்ளையரை ஆதரித்த மக்கள் துரோகி!"

## "இந்து மதப் பாதுகாவலர்!"

### சோவியத் 'என்சைக்லோபிடியா'வில் வர்ணனை

சோவியத் ரஷ்யாவின் 'என்சைக்லோபீடியா'வில் காந்தியாரைப் பற்றிக் கண்டிருப்பவை :—

"........காந்தீயம் என்று பிற்போக்குத் தத்துவத்தின் கர்த்தா! ......வியாபாரம்செய்வதிலும், வட்டிக்குப் பணம் கொடுத்துப் பொருளீட்டுவதிலும் ஈடுபட்டிருந்த பனியா சாதியில் தோன்றியவர் :"

"ஜுலு பிரதேசத்தின் மீது படையெடுத்து தங்கள் துப்துப்பாக்கிகளையும், வாளையும் கொண்டு தாக்குதல் நடத்தி நாசம் செய்துகொண்டிருந்த வெள்ளை இராணுவத்தினருக்கு பணிபுரிய ஒரு இந்திய சுகாதார நிறுவனத்தை உண்டுபண்ணி சிரத்தையுடன் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு உதவி புரிந்தவர்"

"........செல்வாக்குப் பெற்ற இயக்கம், புரட்சிப் பாதையை மேற்கொள்ளும்போல் தோன்றிய நேரத்தில், காந்தியார், மக்களைக் காட்டிக்கொடுத்து. மக்களுக்கு விரோதமாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவினார்."

"......தனது சொந்த வாழ்வில் ஒரு துறவிபோல போலிவேடம் பூண்டிருந்தார்."

"......இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபடுபவர்போலும், பிரிட்டிஷ்காரர்களின் விரோதிபோலும், அவர் ஒரு தலைவர்போல நடித்தார்."

"........மதங்களினால் விளையும் கேடுகளை வெகுவாக காந்தியம் பயன்படுத்திக் கொள்கிறது : இன்னும், மேல் சாதியினருக்கு, கீழ்சாதியினர் நிபந்தனையின்றி கீழ்ப்படியவேண்டும்; இப்போதுள்ள சாதிப்பாகுபாடுகளை மாற்ற முயற்சிப்பதே பாபமான காரியம்; அந்த சாதிகள் எல்லாம், கடவுளின் விருப்பப்படி அமைக்கப்பட்டிருப்பவை என்றெல்லாம் கூறுகிற இந்துமதத்தின் பிடிவாத குணங்களையும் காந்தீயம் பயன்படுத்திக் கொண்டுள்ளது."

—இந்த விபரங்களடங்கிய கடிதமொன்றை 'இந்து' 13-10-54ந் தேதிய இதழில், டி. ஜி. தென்துல்கார் என்பவர் எழுதியுள்ளார்.

## தர்சராக விரும்பும் அச்சுதன்!

திரு—கொச்சி அரசாங்க மந்திரிகளுள் ஒருவரான எ. அச்சுதன், 'தான் ஒரு மந்திரியாயிருந்து, மக்களுடையவும் பத்திரிகைகளுடையவும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் ஆளாவதைக் காட்டிலும், ஒரு சாதாரண தச்சு வேலை செய்பவராக இருப்பதை விரும்புவதாக'க் கூறினாராம்.

அவர் தனது இளமைப் பருவத்தில் தச்சு வேலை கற்றுக்கொண்டு அதையே தனது ஜீவனோபயமாகவும் கொண்டிருந்தாராம்!

"நான் அந்தத் தொழிலிலேயே தொடர்ந்து இருக்க விரும்பினேன்; ஆனால், 'விதி' வேறு விதமாக இருந்து என்னை மந்திரியாக்கிவிட்டது" என்றாராம்!

## ரசாயன உரத் தொழிற்சாலை

### தென்னாட்டு கோரிக்கை

இந்தியாவில் மேலும் 4 ரசாயன உரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த மத்திய சர்க்கார் உத்தேசித்துள்ளதென்று தெரிய வருகிறது.

இந்த 4 ரசாயன உரத் தொழிற்சாலைகளில் ஒன்றாவது தென்னிந்தியாவில் ஏற்படுத்தப் படவேண்டுமென்ற பலமான ஒரு கோரிக்கையும் இருந்து வருகிறதாம்!

## காசு எண்ணும் இயந்திரம்!

நிமிடத்தில் 2,000 காசுகளை எண்ணக்கூடிய இயந்திரத்தை ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் தயாரித்திருக்கிறது. உருவம், கனம் என்ற பேதமின்றி எந்தக் காசையும் எண்ணக்கூடியபடி இது அமைக்கப்பட்டிருக்கிறது. இது தவறு செய்வதே இல்லையாம். சுமார் லட்சம் காசுகளை எண்ணக்கூடிய சக்தியுள்ள இந்த இயந்திரம், குறிப்பிட்ட எண்ணிக்கையில் காசுகளைக் காகிதத்தில் சுற்றிக் கட்டித் தருகிறது. காசுக்கேற்றவாறு விசையைச் சுலபமாக மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

## விவசாயிகளுக்கு உதவி!

உத்தரவாதமான விலை, கடன் வசதி, நிச்சயமான வருமானம், இவைகளை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய, கெனியா சர்க்கார் ஒரு மசோதாவைப் பிரசுரித்துள்ளது. "விவசாய அபிவிருத்தியில் சர்க்காருக்கு அக்கரையுண்டு என்பதற்கு இதுவே சான்று" என்று கெனியா தேசிய விவசாயிகள் யூனியனில் பேசும்போது கவர்னர் குறிப்பிட்டார். "இந்த மசோதாவைச் செயலாற்ற ஏராளமான பொறுப்பும் பொருட் செலவும் உண்டு என்பதை சர்க்கார் அறியும்; ஆனால், விவசாயிகளுடைய உழைப்பிலும், கூட்டுறவிலும் தான் வெற்றியிருக்கிறது," என்றார்.

## 'மனிதனா'? 'மாயனா?'

இராசிபுரம் நக்கீரர் நாடக மன்றத்தாரால் திருமலைப்பட்டியில், 'மனிதனா?' 'மாயனா?' என்னும் அரசியல் சமுதாய புரட்சி நாடகம் 9—10—54 சனிக்கிழமை இரவு மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## உங்களுக்குத் தெரியுமா?

★

**கேள்விகள் :**

1. 1953-54-ல் 115 இலட்சம் டன் உணவுத் தானியம் அதிகப்படியாக உற்பத்தியானதன் பலனாக, இந்தியாவுக்கு மிச்சமாகியிருக்கும் வெளிநாட்டுச் செலாவணியின் மதிப்பு எவ்வளவு?
   (அ) ரூ. 57 கோடி;
   (ஆ) ரூ. 86 கோடி;
   (இ) ரூ. 130 கோடி.
2. ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முதன் மூன்று ஆண்டுகளில், கீழ்க்கண்ட நகரங்களில், எவற்றில் 50 கி. வா. நடுத்தர அலை ஒலிபரப்பிகள் நிறுவப்பட்டுள்ளன?
   (அ) பம்பாய்;
   (ஆ) அகமதாபாத்;
   (இ) ஜலந்தர்.
3. நங்கல் அணைத் திட்டத்தைச் சேர்ந்த எந்த மின்சார நிலையத்தில் அடுத்த சில வாரங்களில் வேலை துவக்கப்படவிருக்கிறது?
   (அ) கங்குவால் மின்சார நிலையம்;
   (ஆ) கோட்லா மின்சார நிலையம்.
4. மக்கள் தொகை இரண்டாயிரத்துக்கு மேலுள்ள கிராமங்களில் எல்லாவற்றிலும் எந்த ஆண்டிற்குள் தபாலாபீசுகள் ஏற்படுத்தப்பட்டுவிட வேண்டுமென்று ஐந்தாண்டுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது?
   (அ) 1954;
   (ஆ) 1955;
   (இ) 1956.
5. ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு புதிதாக எத்தனை ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன?
   (அ) நாளொன்றுக்கு 15 பள்ளிக்கூடங்கள்;
   (ஆ) வாரத்துக்கு 15 பள்ளிக்கூடங்கள்;
   (இ) மாதத்துக்கு 15 பள்ளிக்கூடங்கள்.

**விடைகள் :**

1. (இ); 2. (எல்லா விடைகளும் சரி); 3. (அ); 4. (எல்லா விடைகளும் தப்பு; முதல் இரண்டு ஆண்டிற்குள்ளேயே தபால் வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுவிட்டன); 5. (அ).

# நேபாள மந்திரி சபையில் பிளவு!

## அரசியல் நிலைகுறித்து கொய்ராலா கட்சி கவலை

நேபாளத்தில் இன்று நிலவுகிற அரசியல் சூழ்நிலையில் சர்க்கார்மீது துவேஷ மனப்பான்மையும், தவறான கருத்து வேறுபாடும் நிலவுவது குறித்து; தீர்மானம் ஒன்றின் மூலம் நேபாள தேசீயக் கட்சி கவலை தெரிவித்துள்ளது.

நேபாளப் பிரதமர் எம். பி. கொய்ராலாவைத் தலைவராகக் கொண்ட அந்தக் கட்சியின் செயற்குழு நிறைவேற்றியுள்ள அந்தத் தீர்மானத்தில் மேலும் கண்டிருப்பதாவது :—

"தேசீய ஜனநாயக் கட்சியின் தியாகங்கள், காரியம் சாதிக்கப் பயன்படவில்லை என செயற்குழு கருதுகிறது. இப்போதுள்ள அரசாங்கம், தேசீய ஜனநாயக் கட்சியின் தலைவரான கொய்ராலாவால் தலைமை தாங்கி நடத்தப்படுவதால் பொறுப்பு நமக்கு இன்னும் அதிகமாகியுள்ளது."

செயற்குழுவிற்குத் தலைமை வகித்த பிரதமர் கொய்ராலா, "பிரச்னைகளை மீண்டும் புதியதாக விவாதித்து ஆராய வேண்டியுள்ளது; ஏனெனில், கட்சியின் திட்டங்களை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்வதாக இல்லை," என்று குறிப்பிட்டார்.

மேலும், புதியதாக மந்திரி சபையினுள் நுழைந்திருப்பவர்கள் மீது அதிருப்தி தெரிவித்த அந்தச் செயற்குழு மேலுமொரு தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"அரசாங்கத்தைப் பற்றி மக்களிடை நிலவும் பொதுவான அபிப்பிராயம் என்னவெனில், மந்திரி சபை ஒற்றுமை உணர்வுடன் வேலை செய்யவில்லை. அப்படி ஒற்றுமையுடன் வேலை செய்யாமைக்கான காரணம் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. மந்திரி சபைக்குள் இரகசியமான குற்றச் சாட்டுக்கள் ஏதேனும் இல்லை என்று யாராலும் மறுத்துரைக்க முடியாது."

மேலும் ஜனநாயகக் கட்சி மந்திரி சபையில் பூரணமான ஒற்றுமை இல்லாவிடின் அரசாங்கம் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருக்குமெனவும், எனவே புதியதாக மந்திரி சபையினுள் நுழைந்தவர்கள், பொறுப்புணர்வுடனும் ஒற்றுமையாகவும் நடந்துகொள்ள வேண்டிக்கொண்டுள்ளது என்று தெரிகிறது.

## நன்கொடை

கீழ் பென்னாத்தூர் தோழர் ச. கண்ணன் அவர்களிடமிருந்து 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

# வாக்குகளை விற்று கிறித்துவ கோயிலுக்கு நிலம்?

## நிலத்துக்குப் பதிலாக பணமாகப் பெற சிலர் முனைப்பு!

## இரு கூட்டத்துக்குமிடையில் ஏற்பட்ட கொலை வழக்கில் தீர்ப்பு

கிருஷ்ணு மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில், ஓட்டளிப்பதற்காக அந்த கிராமத்திற்கு தேர்தலுக்கு நின்றவர் தருவதாக வாக்களித்த ரூ. 4,000-த்தை பணமாகப் பெறுவதா, அல்லது நிலமாகப் பெறுவதா என்ற வாதம் கோஷ்டிச் சண்டையாக முற்றியதின் விளைவாக ஒருவர் கொல்லப் பட்டதாயும், அதற்காக மற்றக் கோஷ்டியினர்மீது வழக்குத் தொடரப்பட்டு, ஏழு பேர்களுக்கு சிறைத் தண்டனை அளிக்கப்பட்ட தாகவும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

கன்னுவரம் தாலுகாவில் உள்ள மேடூரைச் சேர்ந்த சமரகுடம் எனும் கிராமத்தில் இரு கோஷ்டிகள் உண்டு; ஒரு கோஷ்டிக்குத் தலைவர் கொண்டேடி ராஜாராவ் என்பவர்; மற்றொரு கோஷ்டித் தலைவர் பண்டல யோசுபு என்பவர்.

சென்ற ஆண்டு நடைபெற்ற பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலின்போது யெல்மஞ்சில்வி தசரத ராமையா என்பவரை எதிர்த்து நின்ற யெல்மஞ்சில்வி ராம மோகனராவ் என்பவருக்கு, தங்களின் 500 ஓட்டுக்களையும் தருவதாக இருகோஷ்டியினரும்கூறினராம். அதற்காக ராம்மோகன ராவ் அவர்களுக்கு ரூ. 4,000 தருவதாக வாக்களித்தாராம். பின்னர், எதிர்த்து நின்றவர் வாபஸ் வாங்கிக் கொள்ளவே, ராமமோகன ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டாராம்.

பிறகு, வாக்களித்த இரு கோஷ்டிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தருவதாக உறுதியளித்த தொகை ரூ. 4,000-த்தையும் ரொக்கமாகப் பெறுவதா, அல்லது, ஒரு கிருஸ்தவ கோவில் கட்ட நிலமாக பெறுவதா என்று முடிவு செய்யக் கூடினர்.

பண்டல யோசுபுவின் தலைமையிலிருந்த கோஷ்டி நிலம் வேண்டுமென்றது; அடுத்த கோஷ்டி பணம் வேண்டுமென்றது. இந்தத் தகராறு முற்ற ஆரம்பித்தது.

கடந்த பிப்ரவரி 15-ந் தேதியன்று ஜேம்ஸ் என்ற நாராயடு என்பவர் இதுபற்றி ஒரு வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அது சண்டையாக முற்றி, அவர் கத்தி கொண்டு தாக்க ஆரம்பித்தாராம்; ஆனால், எதிரிகள் பலர் கூடி அவரைத் தாக்கியிருக்கின்றனர்; ஜேம்ஸைக் காப்பாற்ற முயன்ற பலரும் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜேம்ஸ் தப்பி ஓடி ஒரு வீட்டினுள் நுழைந்தார்; என்றாலும், பண்டல யூசுபுவின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், அவரை விடாது துரத்திப் பிடித்து, வீட்டிலிருந்து வெளியே கொண்டுவந்து அடித்துப் படுகாயப்படுத்தியதின் விளைவாக ஜேம்ஸ் கொல்லப்பட்டாராம்.

அதன் பேரில்தான், பண்டல யூசுபுவின் மீதும், இன்னும் 18 பேர் மீதும் வழக்குத் தொடரப் பட்டதாம்.

கிருஷ்ணு மாவட்ட நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவர்களில் 12 பேர்களை விடுவித்தும், 7 பேர்களுக்கு பலதரப்பட்ட ஆண்டு சிறைவாசமும் தந்து தீர்ப்பளித்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சம்பவங்களுக்கு மூல காரணம் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் ஓட்டுக்கள் விலைக்கு வாங்கப்பட்டதேயாகும்.

### பாக். பிரதிநிதித்துவச் சபை ஏற்படலாம்?

பாகிஸ்தானின் அகில நிர்ணய சபையைக் கலைத்துவிட்டு, அதற்குப் பதிலாக, பிரதிநிதித்துவச் சபையொன்றை ஏற்படுத்தும்படி, அவாமி லீகின் தலைவரான எச். எஸ். சுஹரவர்த்தி, தாம் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

### தொண்டமான் மனக்கசப்பு!

'நாடற்றவர் பிரச்சினை ஒத்திப் போடப்பட்டதற்கு வருத்தம்!

"டில்லியில் இலங்கை—இந்தியப் பிரதமர்களுக்குள் ஏற்பட்ட உடன்பாட்டில், 'நாடற்றவர்' பிரச்சினை தீர்க்கப்படவில்லை; ஆனாலும், அப்பிரச்சினையை இன்னும் சிலகாலத்துக்கு ஒத்தி வைத்து, பின்னர் மீண்டும் அது பற்றி விவாதித்து அதற்குப் பரிகாரம் காணலாம் என்று அவர்கள் ஒப்புக் கொண்டிருப்பது விசேடமாகும்:

"'நாடற்றவர்கள்' பிரச்சினை குறித்துப் புனர்பரிசீலனை செய்யப்படும்வரை, அவர்கள் எவ்விதக் கஷ்டத்துக்கும் ஆளாக்கப்படமாட்டார்கள்; உத்தியோக விஷயங்களிலும் அவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்,"

என்று, இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவர் தொண்டமான், சென்னையில், பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

முதலில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசிய சில தலைவர்களும்கூட, இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றனராகையால், இவ்வொப்பந்தம் நன்றாக அமுல் செய்யப்பட ஏதுவாயிருக்குமென்றும், இந்தோ-பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டம் அமுல் நடத்தப் படுவதைப் பொறுத்தே, 'நாடற்றவர்' (இலங்கை-இந்தியர்) தொகை இருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### விவேகமற்றது!

—"........மொத்தத்தில் இலங்கை சர்க்கார் எவ்வாறு அமுல் நடத்துகிறார்கள் என்பதை அனுபவத்தில் அறிந்த பிறகு தான் டில்லி உடன்பாடு விவேகம் நிறைந்தது என்று சொல்ல முடியும். சென்ற 10 மாதத்திய அனுபவம் நம்பிக்கையை உண்டுபண்ணக் கூடியதல்ல. ஒருக்கால் இரண்டு ஆண்டுகளுக்கு சிறிது நிம்மதி இருக்கலாம் என்பது தவிர புது ஒப்பந்தத்தைப் பற்றி நம்பிக்கையுடன் எதையும் சொல்வதற்கில்லை.

—'தினமணி' : 12—10—54

### இயந்திரக் கருவிகள் உற்பத்தித் தொழிலகம்

இந்தியத் தொழிலதிபர் ஜி. டி. பிர்லா, இந்தியாவில் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யும் ஒரு 'பாக்டரி'யை ஏற்படுத்துவது சம்மந்தமாக ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த ஒப்பந்தப்படி, இயந்திரக் கருவிகளை உற்பத்தி செய்யும் 'பாக்டரி'யை ஏற்படுத்த ரஷ்யா, தன்னுடைய தொழில் நுட்ப நிபுணர்களைத் தந்துதவுமென்றும் கூறப்படுகிறது.

### ஆலைத் தொழிலாளருக்கு போனஸ்!

சர்க்கார் விசாரணை செய்கிறது!

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 38 ஜவுளி ஆலைகளும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1952, 53-ம் ஆண்டு போனஸ் சம்மந்தமான பிரச்சினைகளைத் தீர்க்க, சென்னை சர்க்காரின் பிரதிநிதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு ஒரு பஞ்சாயத்துக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக, சென்னை மாநில தொழிலாளர் நல அமைச்சர் எம். பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் குழு, நவம்பர் மாத இறுதிக்குள் தன் வேலைகளை முடித்துக்கொண்டு, இறுதியான தீர்ப்பு ஒன்றை அளிக்கும் என்றும் தெரிகிறது.

### பன்னீர்செல்வம்நினைவுப் படிப்பகம்

பொன்னகரம் (மதுரை), அக். 13—10—10—54ல் தோழர் இராயப்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகச் செயற்குழு கூட்டத்தில், கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டபின், தோழர் மணி 'கழகமும் கடமையும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

### உழவர் கழகம் துவக்கம்

4—10—54ல், குரும்பாளையத்தில் சி. அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உழவர் கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: கே. ஆர். ஒடையப்பன்; துணைத் தலைவர்: சி. எஸ். ஆறுமுகம்; செயலாளர்: அ. அங்கமுத்து; துணைச் செயலாளர்: முத்துராசன்; பொருளாளர்: மு. சிவசுப்பிரமணியம்; மற்றும் 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# தி. மு. கழகத்தின் வளர்ச்சியைக் குறைக்க 'ஜன சக்தி' தில்லுமுல்லு!

## அரிசனருக்கு எதிராக உயர் ஜாதியாருக்குச் சலுகை!

## கம்யூனிஸ்டு — காங்கிரஸ் கள்ளக் காதல்!

ஆசிரியர் "நம் நாடு"

ஐயா,

சென்ற வார 'ஜன சக்தி' இதழில், 'பரவையில் சில தி. மு. கழகத் தோழர்கள் கட்சியிலிருந்து விலகியதாக' செய்தி வெளியாகியிருந்ததைப் பார்த்தேன். அதுசம்பந்தமான உண்மையைப் பொதுமக்களுக்கு விளக்க கட்சியின் சார்பாக நான் கடமைப்பட்டுள்ளேன். தோழர்கள் அய்யாச்சாமி, குழந்தை, அய்யாவு, கண்ணுச்சாமி பிச்சைஇந்த ஐவரும்கழக உறுப்பினர்களோ, அனுதாபிகளோ அல்ல. இவர்கள் தி. மு. கழகத்தில் எந்தவிதத் தொடர்பும் கொள்ளவில்லை. இவர்களிடம், வேண்டுமென்றே கம்யூனிஸ்டு தோழர்கள் கையெழுத்து வாங்கி, அந்தப் பகுதியில் தி. மு. கழகத்திற்கு உள்ள செல்வாக்கைக் குறைக்கவும், கடந்த மாவட்டக் கழகத் தேர்தலில் தங்களுடைய அபேட்சகர் தோழியர் கே. பி. ஜானகியை **இவர்கள் ஆதரிக்கவில்லையே** என்ற ஆத்திரம் காரணமாகவும், இந்தப் பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டக் கழகத் தேர்தலில் தி. மு. கழகம் நடு நிலைமை வகித்தது; காங்கிரசையோ, கம்யூனிஸ்டையோ ஆதரிக்கவில்லை.

**இந்த ஆண்டில் எங்கள் ஊரில் நடந்த ஊராண்மைக் கழகத் தேர்தலில் எங்கள் ஊர் கம்யூனிஸ்டுகள் காங்கிரசுடன் சேர்ந்துகொண்டு 'ஐக்கிய முன்னணி' என்று சொல்லி வெற்றி பெற்றுள்ளனர். இன்றைய ஊராண்மைக் கழகத்தின் தலைவர் ஒரு காங்கிரஸ்காரர். அதில் காங்கிரஸ் பிரதிநிதிகள் இருவர் உள்ளனர்; அவர்களுடன் சேர்ந்து தான் வேலை செய்கின்றனர், இந்தக் கம்யூனிஸ்டுகள்! இந்தக் கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து கொண்டு, நீண்ட காலமாகக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பணியாற்றிய தோழர் முத்துக்குடும்பனை ஊராண்மைக் கழகத் தேர்தலில் தோற்கடித்தனர்.**

**தோழர் முத்துக்குடும்பன் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்; அவரை எதிர்த்தவர் ஒரு உயர் சாதியைச் சேர்ந்த பரவை விவசாய சங்க உதவிச் செயலாளர்; சாதி வெறி இந்த அளவில் உள்ளது!**

**ப. கார்மேகம்,**
தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி
மதுரை மாவட்டம்
10—10—54

# திரு-கொச்சி தமிழரின் அவலநிலை!

## எல்லாம் மலையாளி மயமாக்கப்படுகிறதாம்!

நாகர்கோவில், அக். 9—

**"திருவாங்கூரிலுள்ள தமிழர்களை அங்கிருந்து விரட்டும் நோக்கத்துடன், அங்குள்ள எல்லாப் பதவிகளிலிருந்தும் அவர்களை நீக்கி, கல்வி, ரெவின்யூ, கோர்ட்டுகள், போலீஸ், இராணுவம் ஆகிய 'சர்விசு'களை, அங்குள்ள மலையாளிகள் மயமாக்கும் கொள்கைகளை அங்குள்ள சர்க்கார் பின்பற்றி வருகிறார்கள்,"**

—என்று, நாகர்கோவில் மாவட்ட அரிசன சேவக் சங்க கௌரவத் தலைவரும், பழம்பெரும் காங்கிரஸ் தலைவருமான டாக்டர் எம். இ. நாயுடு என்பவர், திரு—தமிழரின் இழிவு நிலை பற்றி, பிரதமர் பண்டித நேருவுக்கு அனுப்பிய மகஜரொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அந்த மகஜரில், அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"கதர் நிர்வாகம்கூட மலையாளிகளிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது: தாழ்த்தப் பட்ட பெண்கள் விடுதிக்கு மானியம் அளிக்கப்படுவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, தமிழர்கள் வாழும நாகர்கோவிலின் மத்தியில் ஒரு மலையாளி பெண்களுக்கான அனதை விடுதி ஒன்று திறக்கப் பட்டுள்ளது; பெருத்த அளவில் மலையாளிகள், தமிழர் வாழ் பிரதேசங்களில் வந்திருப்பதின் விளைவாக தமிழ் மக்கள் தொகையின் விகிதாசாரமும் குறைவுபடுகிறது; எனவே, அங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்ட மனதுடன், தாங்கள் மலையாள ஆட்சியிலிருந்தும் விடுபட்டு, தமிழ் நாட்டுடன் இணையவேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் இணைப்பாக ஒரு ரெயில்வே சாலை அமைக்கப்பட்டால், வர்த்தக விஷயங்களுக்கும், பந்தோபஸ்து காரியங்களுக்கும் அதுமுக்கியமான ஒரு சாதனமாகும். ஆனால், தமிழர் வாழ் பிரதேசங்கள் வளப்பம் பெற்றுவிடும் என்ற ஒரே அச்சத்தின் காரணமாக, திரு-கொச்சி சர்க்கார், அதைச் செய்யாமல் புறக்கணித்துக் கொண்டே வருகிறது."

[பண்டித நேருவைவிட, பல ஆண்டுகாலம் காங்கிரஸ் ஊழியராக இருந்துவருபவர் மேற்படி பெரியவர். பண்டிதரின் தந்தையாரும், மேற்படியாரின் தந்தையாரும் நேரடியாக முகமறிந்தவர்கள். பண்டிதரை நேரில் கண்டு, திரு—கொச்சியில், ஆட்சியாளர்கள் செய்துவரும் ஓரவஞ்சனையைக் கூற, மேற்படியார் டெல்லி சென்றிருந்ததாகவும், நேருவைக் காண்பதற்கு அனுமதி கிடைக்காது ஊர் திரும்பினதாகவும் சொல்லப்படுகிறது.] (ஆ-ர்)

### கலந்து கொள்ளாது!

ஐ. நா.-வில் நடைபெறவிருக்கும் தென்னுப்பிரிக்கப் பிரச்சினை பற்றிய விவாதங்களில் தற்சமயம் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தென்னுப்பிரிக்கா அறிவித்திருக்கிறதாகத் தெரிய வருகிறது.

### நன்றி

★

"நான் வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்றமை குறித்து, என்னைப் பாராட்டி கடிதங்களும், தந்தியும் அனுப்பிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், வாக்காளர்களுக்கும், தனித்தனியே பதில் எழுத இயலாமையால், யாவருக்கும் என் உளங்கனிந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று, வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி அறிவிக்கிறார்.

### பாரதிதாசன் கலை அரங்கம் துவக்கம்

மேலப்பரமக்குடியில் 9-10-54ல் தி. மு. கழகத் தோழர்களால் 'பாரதி தாசன் கலை அரங்கம்' துவக்கப்பட்டது. தோழர் ஆர். கே. சி. சாமி அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

அன்று இரவு 10 மணிக்கு, கலை அரங்கத்தின் முதல் நாடகமாக "கண்ணீர்" என்ற நாடகம் நடைபெற்றது. தோழர்கள் கே. பி. வேலன், எஸ். எஸ். மணாளன், ஜி. திராவிடமூர்த்தி, எஸ். ராசகோபால், நாகராசன், ஏ. டி. எஸ். குரலரசு, மனோகர், அண்ணாதாசன் ஆகியோர் நாடகத்தைப் பாராட்டிப் பேசினர்.

### கழகத் தோழர்கட்கு

"பகுத்தறிவு" ஆசிரியர் ப. கண்ணன் அவர்பால் பாதிக்கப்பட்டு, [illegible]னும் ரோதங்கி சிகிச்சை பெறு வேலூரிற்இரு மாதங்கள் அவர் கிறார். பொதுக்கூட்டங்களிலும் எந்தற்கொள்ள முடியாது என் கலத் தோழர்கள் அறிய விரும்புகிறோம்—என்று தோழர் என். ராமகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

# மைசூர் மாநில நிர்வாகத்தில் ஊழல்!

## செலவினங்கள்மீது கண்காணிப்பு இல்லை

## எரு உற்பத்தித் திட்டத்தில் ரூ. 2 லட்சம் பாழ்!

### பொதுக் கணக்குக் குழு தரும் தகவல்

**“சர்க்கார் இலாகாக்களின் தலைவர்கள், சரியான முறையில் கணக்கு வைக்காமலும், ஏராளமான பணம் செலவிடுவதைக் கட்டுப்படுத்தாமலும் இருந்துள்ளனர்.”**

என்று மைசூர்சர்க்காரின் பொதுக் கணக்கு தணிக்கைக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

மைசூர் முதல் அமைச்சர் அனுமந்தையா மைசூர் சட்டசபையில் 1950—51-ம் ஆண்டு கணக்குப் பட்டுவாடா, 1952-ம் ஆண்டு கணக்கின் தணிக்கை அறிக்கை ஆகியவற்றை பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் என்னும் முறையில் விவாதத்திற்கு வைத்தார்.

“1953—54-ம் ஆண்டில்கூட சர்க்கார் இலாகாக்கள் அனைத்தும் கணக்கு வைக்கும் முறை பற்றியும் அவைகளை அக்கவுண்டெண்ட்— ஜெனரலின் கணக்குடன் சரி செய்வதுபற்றியும், சர்க்காரின் பொருளாதார இலாகாவின் உத்தரவுகளைக் கடைப்பிடிக்கவில்லை,” என்று, மேற்படி குழு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

“போதுமான திறமை வாய்ந்த ஊழியர்கள் கிடைக்காததே இந்த நிலைமைக்குக் காரணம் என்று இலாகா தலைமையினர் சமாதானம் கூறினாலும் தேவையான ஊழியர்களை அனுப்புமாறு தணிக்கை இலாகா தலைமை அதிகாரியைக் கேட்டிருக்க வேண்டும்,” என்று மேலும் அக்குழு கூறியுள்ளது.

சட்டசபையால் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் பல இனங்களில் அதிகமாக செலவிட்டிருக்கிறார்களாம். 24 இனங்களில் 10 சத விகிதமும், சில இனங்களில் 30-முதல் 100 சத விகிதம் வரையிலும் அதிக செலவு ஆகியுள்ளது என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படி அதிகச் செலவு ஏற்பட்டதற்கு சொல்லப்படுகிற சமாதானம் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை.

“இலாகாக்கள் சரிவர கணக்குகளை நிர்வகிக்காததாலும், செலவினங்களின்மீது கண்காணிப்பு இல்லாததாலும், இந்த அதிகப்படி செலவுகளை ஒழுங்குபடுத்த இயலாமற் போயிற்று,” என்று அக்குழு எடுத்துக் காட்டியுள்ளது.

“மைசூர் சர்க்கார் முயன்று, இப்போது நிறுத்திவிட்ட உர உற்பத்தித் திட்டத்தில் மொத்தம் 2 லட்சத்து இருபதாயிரம் ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளது. தேவைகளைச் சரிவர பரிசீலித்து பின்னர் திட்டத்தை ஆரம்பித்திருந்தால் இந்த நஷ்டத்தைத் தடுத்திருக்க முடியும். இனிமேல் இதுபோன்ற பிரச்சினைகளில் பொதுப் பணத்தைச் செலவழிப்பதில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டும்,” என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

“சர்க்காரின் வியாபார நிலையங்களில் இருப்புக் கணக்கு எடுப்பில் மிகுந்த குறைபாடுகள் காணப்படுகின்றன; உற்பத்தி பற்றிய செலவுகளுக்கு சரியான கணக்கு கிடையாது. நிலுவைகள் ஏராளமாக உள்ளன; [illegible]ப்பு, எரு ஆகிய தொழி[illegible]சாலைகளை அபிவிருத்தி [illegible]ய்வது பற்றிய, நிபுணர்களின் ஆலோசனையைப் பெறச் செய்யப்பட்ட செலவுகளுக்கு சரியா[illegible] சமாதானம் கிடையாது; இந்[illegible] வகையில் மொத்தம் சுமார் ரூ. 2½ இலட்சம் பாழாகியுள்ளது என்[illegible]று கணக்கிடப்பட்டிருக்கிறது.

“மராமத்து இலாகாவி[illegible]ல் கடுமையான ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன; உடனே தக்க [illegible] நடவடிக்கை எடுக்காவிடில் மோசடி[illegible]கள், அதிகச் செலவுகள் ஏற்படுவ[illegible]

தைத் தடுக்க வழி காணமுடியாது; ‘திட்டங்கள்’ இல்லாமலேயே பல வேலைகள் ஏற்பட்டிருக்கின்றன,”

—இவ்வாறும், இதுபோன்ற பல குறைகளையும், பொதுக் கணக்குக் குழு எடுத்துக் காட்டியுள்ளது.

# பிரெஞ்சிந்திய மக்கள் சபைத் தலைவர் தலைமையில் வாக்கெடுப்பு

## அவ்வரலாற்று நிகழ்ச்சியைக் குறிக்க ஒரு புது மாளிகை!

பிரெஞ்சிந்தியாவின் எதிர்காலம் குறித்து பிரதிநிதித்துவ சபையினரும், நகர மன்ற உறுப்பினர்களும் வருகிற அக். 18-ந் தேதியன்று கூடி முடிவுகட்ட இருக்கிறார்கள் அல்லவா?

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கூட்டம் நடைபெறுவதற்காகக் கீழூரில், 60×30 அடி அளவில் ஒரு மாளிகை துரிதமாக அமைக்கப்பட்டு வருகிறது. அதன் செலவு ரூ. 50,000 ஆகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

பிரெஞ்சு ஆதிக்கம் அகலுகிற சரித்திரப் பிரசித்தி பெற்ற முடிவு மேற்கொள்ளப்படும் அந்த மாளிகை, காலா காலத்திற்கும் காப்பாற்றப்பட இருக்கிறது.

பிரெஞ்சிந்திய பிரதிநிதித்துவ சபையின் தலைவரான பாலசுப்ரமணியம், “பிரெஞ்சிந்தியப் பகுதிகள், இந்தியாவுடன் இணைய வேண்டுமென்ற தீர்மானத்தை சபை ஏகமனதாகவே நிறைவேற்றும்; ஏனெனில், சபையின் பிரதிநிதிகள் எல்லோரும் சோஷலிஸ்டு கட்சி அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; அவர்கள் எல்லோரும் கடந்த மார்ச்சு மாதத்திலேயே தங்களின் திட்டமான முடிவைத் தெரிவித்து விட்டிருக்கின்றனர். இப்போதும் அப்படியே தெரிவிப்பார்கள்,” என்று கூறியுள்ளார்.

மேலும், வாக்கெடுப்பு நடைபெறுகையில், பிரெஞ்சிந்திய நீதிபதி ஒருவரும் உடனிருப்பார் என்று அறிவிக்கப்படுகிறது.

வாக்கெடுப்புக் கூட்டத்திற்கு பிரெஞ்சிய மக்கள் சபைத் தலைவரான பாலசுப்பிரமணியம் தலைமை தாங்குவார் என்று தெரிகிறது.

★

## முதலியார்பேட்டை மேயர் விடுதலை

புதுச்சேரி, அக். 13—

முதலியார் பேட்டையின் மேயரும், பிரெஞ்சிந்தியக் கீழ்சபை உறுப்பினருமான மதனகோபால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்று செய்தி வெளியாகியுள்ளது. முதலியார் பேட்டை நகரசபை உறுப்பினரான வைத்தியலிங்கமும் விடுவிக்கப்பட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

திரு. மதனகோபால் அவர்கள், விடுதலையானதும், கீழ்சபைத் தலைவர் பாலசுப்பிரமணியத்தின் வீடு திக்குச் சென்றார். அங்கு, புதுவையிலுள்ள கீழ்சபை, நகரசபை உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது.

## டெல்லி உடன்பாடு

### இலங்கை மந்திரி சபை விவாதம்

### கம்யூனிஸ்டுகளின் கண்டனம்!

கொழும்பு, அக். 14—

இலங்கை இந்தியர் பிரச்சினை குறித்து, இந்தியா—இலங்கை ஆகிய இரு நாட்டுப் பிரதமர்களும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை குறித்து இலங்கை மந்திரி சபை இன்று விவாதிக்கிறது. பிரதமர் கொத்தலாவலை இதுபற்றி ஒரு அறிக்கை வெளியிடுவார் எனவும் தெரிகிறது.

இலங்கையில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் புதிய ஒப்பந்தங் குறித்து கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் அறியக்கிடக்கிறது.

கம்யூனிஸ்டு, டிராட்ஸ்கி ஆகிய கட்சித் தலைவர்கள் தனித்தனியாக வெளியிட்டுள்ள அறிக்கைகளில், புதிய ஒப்பந்தம் நாடற்றவர் பிரச்சினைக்குப் பரிகாரம் காணாதது குறித்து வருத்தம் தெரிவித்துள்ளனர்.

தாங்கள் ஆட்சியிலிருக்க வேண்டும், அதிகாரம் செலுத்த வேண்டுமென்பதற்காக, இலங்கையில் உள்ள தொழிலாள வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் அரசியல் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிருக்கின்றன, இவ்வகையின் முதலாளித்துவ ஐக்கிய சர்க்கார் என்பது மட்டும் தெளிவாகத்தெரிந்து விட்டது புதிய ஒப்பந்தத்தின் மூலம் என்றும் அந்த அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

# ரஷ்யாவில் “இரும்புத் திரை” உண்டாம்!

## இந்திய தூதுக் குழு கண்டுபிடிப்பு!

பம்பாய், அக். 12—

“ரஷ்யாவில் ‘இரும்புத் திரை’ இருப்பது உண்மைதான்; போலீஸ் பாதுகாப்புடன், குறிப்பிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் உடன்வர, முன்னேற்பாடோடு கூடிய காணத்தகு காட்சிகளைக் காணும் சுற்றுப்பயணம்தான், அங்கு எல்லா இடங்களிலும் நடைபெறுகிறது; சோவியத் மக்களுடன் தூதுக் குழுவினர் தாராளமாகக் கலந்துரையாடுவது தடுக்கப்படுகிறது,”

—என மாஸ்கோ பல்கலைக் கழக அழைப்பின்மீது ரஷ்யா சென்று திரும்பிய இந்திய பேராசிரியர் மாணவத் தூதுக்குழுவின் செயலாளரான கே. சி. மிஷ்ரா குறிப்பிட்டார்.

தாங்கள் தங்கியிருந்த உறைவு விடுதியில், தங்களை சந்தித்துப்பேச ஆங்கிலம் தெரிந்த ரஷ்ய மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கழகக் கூட்டங்கள்

★

**அரிமழம் (திருச்சி மாவட்டம்)**
தி. மு. க. 2-ம் ஆண்டு நிறைவு விழா
15—10—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: தோழியர் பொற்செல்வி
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு
இரவு ‘இராமாயணம்’ ஓரங்க நாடகம் நடைபெறும்

★

**கரிசல்குளம் (விளாங்குடி)**
பகுத்தறிவு மன்றம் துவக்க விழா
16—10—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். மணி
பேசுவோர்:
எம். எஸ். இராமசாமி
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்

★

**மேல்பட்டாம்பாக்கம்**
திரௌபதி அம்மன் கோவில் திடலில்
16—10—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். வேலாயுதம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
கே. ஆர். சபாபதி
சி. இளவழகன்

★

**பொள்ளாச்சி**
திருவள்ளுவர் திடலில்
16-10-54 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
கண்ணதாசன்
ஜே. பி. ஜெபக்கனி
எம். ஜி. சீதரன்

★

**காங்கயம்**
16—10—54 மாலை 7 மணிக்கு
தலைவர்: ஏ. எஸ். நாதன்
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
கே. என். அய்யாசாமி
வேலன்


## உடனே தேவை

கீழ்க்காணும் ஊர்களில் ‘நம் நாடு’ இதழை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

திண்டிவனம்
திருவையாறு
திருநெல்வேலி
பறங்கிப்பேட்டை
கும்பகோணம்
கடலூர்

நிர்வாகி,
‘நம் நாடு’


## பெருகிவரும் வியாதி வகை!

### சென்னையிலும் உருவாகிறது!

சென்னை, அக். 13—

சென்னை மாநிலத்தில், தற்போது, பெயர் கண்டுபிடிக்கப்படாத ஒரு வகை வியாதி நிலவி வருகிறது.

இவ்வியாதி ‘க்யூ காய்ச்சல்’ என்ற ரகத்தைச் சேர்ந்ததாக இருக்கலாமென்று சென்னை சர்க்காரின் சுகாதார இலாகா கருதுகிறதாம்.

இந்தக் காய்ச்சல் பீடிக்கப்பட்டிருப்பதை வெளிகாட்டப்போதிய அறிகுறிகள் இல்லையென்றாலும், குளிர், தலைவலி, பலவீன உணர்ச்சி ஆகிய தன்மைகள் திடீரெனத் தோன்றுவதும், வியர்வை எடுத்தல், லேசான மார்வலி, இருமல் காணப்படுதலும் இவ்வகைக் காய்ச்சலின் அடையாளங்கள் எனக் கூறலாம்.

## ரூ. 30,000 அனுமதி!

அண்ணாமலை நகர், அக். 13—

சர்வ கலாசாலை மானியக் கமிஷன், அண்ணாமலை சர்வ கலாசாலையின் விஞ்ஞான இலாகாவுக்கு புத்தகசாலை நூற்களும் பத்திரிகைகளும் வாங்குவதற்காக ரூ. 30,000 அனுமதித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

# மலேயாவில் மூன்று இந்தியர்கள் படுகொலை!

## கம்யூனிஸ்டுகளாக இருந்தனர் என்பதே குற்றச்சாட்டாம்!

சிங்கப்பூர்—

“மயில்ராவணன்” என்ற இந்தியரை, அவர் கம்யூனிஸ்டு கட்சிச் சார்பினராயிருந்தார் என்பதால் சுட்டுக்கொன்று விட்டதாக கோலாலம்பூரிலிருந்து வெளியிடப்பட்டுள்ள சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது.

வடக்கு ஜோகிரிலிருக்கும் பயங்கரவாதிகளின் கூடாரமொன்றிலிருந்த அவர், மற்றும் மூன்று பேர்களுடன் கடந்த ஆகஸ்டு 14ந் தேதியன்று கூர்க்க [illegible]ராக்கிகளுக்கு இரையாயினராம்.

இந்திய கம்யூனிஸ்டான ‘மயில்ராவணன்’ பல பெயர்களில் உலவிவந்தாராம். அவர், நெகரி செம்பிளின் ராஜ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அங்கத்தினராயிருந்தாராம்.

சிங்கப்பூர் துறைமுகத்தில் ஒரு தொழிலாளியாயிருந்த அவர், யுத்த காலத்திற்கு முன்பே கம்யூனிஸ்டு ஆர்ப்பாட்டக்காரர் எனக்கண்டு பிடிக்கப்பட்டார்.

கம்யூனிஸ்டு கட்சியில், யுத்தத்திற்குப் பின் ஒரு முக்கியமான அங்கத்தினராயிருந்தாராம்.

அவசர நிலைமை பிரகடனப் படுத்தப்படுவதற்கு சின்னாட்களுக்கு முன்பு அவர் தனது சகாக்களில் 14 பேருடன் காட்டிற்குள் புகுந்து தலைமறைவாகி விட்டாரெனக் கூறப்படுகிறது.

அக். 14-ந் தேதியன்று கொல்லப்பட்டவர்களில் மற்றும் இருவரும் இந்தியர்கள் என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்; அவர்களில் ஒருவர், மோகன் என்பவர், மயில்ராவணனின் மெய்க்காப்பாளராம்.

மூன்றாவது நபரின் பெயர் தெரியவில்லையாம்.

சர்க்கார் கணக்குப்படி இன்னும் 120 இந்தியர்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்கின்றனராம்; காடுகளில்தலைமறைவாக இருந்து அவர்கள் வேலை செய்கின்றனராம்!

## 8 பெண்கள் உள்பட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இப்போதுதான் போலீசார் முதல் தடவையாகக் கைது செய்ய முற்பட்டுள்ளனர்.

சத்தியாக்கிரகிகளைப் போலீஸ் லாரியில் ஏற்றும்போது கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டதென்றும், சில போலீசாரும், நகர கொத்தவாலும் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

இன்று கைதான 125 பேர்களில் 8 பேர் பெண்களாவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.